# இந்தியப் பகுதியை சீனா ஆக்கிரமித்ததா? ராகுல் காந்திக்கு சுப்ரீம் கோர்ட் கண்டனம்

## பொறுப்பான எதிர்க்கட்சி தலைவராக இருந்து கொண்டு இதுபோன்று பேச வேண்டாம்

புதுடெல்லி, ஆக.5–

**நீங்கள் உண்மையான இந்தியராக இருந்தால், 2 ஆயிரம் சதுர கி.மீ. இந்திய பகுதியை சீனா ஆக்கிரமித்ததாக ஆதாரமின்றி பேச மாட்டீர்கள் என்று ராகுல் காந்திக்கு சுப்ரீம் கோர்ட் கண்டனம் தெரிவித்தது.**

நாடாளுமன்ற எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி கடந்த 2022ம் ஆண்டு 'பாரத் ஜோடோ யாத்ரா' என்ற பெயரில் யாத்திரை மேற்கொண்டார். அந்த ஆண்டின் டிசம்பர் மாதத்தில், யாத்திரையில் பேசிய ராகுல்காந்தி, எல்லையில் சீனப்படைகளுடனான மோதல் பற்றி குறிப்பிட்டார். அப்போது அவர் இந்திய ராணுவம் பற்றி தரம் தாழ்ந்து பேசியதாக உதய் சங்கர் ஸ்ரீவஸ்தவா என்பவர் லக்னோ கோர்ட்டில் ராகுல்காந்திக்கு எதிராக வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கில், ராகுல்காந்திக்கு லக்னோ கோர்ட் சம்மன் அனுப்பியது. சம்மன் உத்தரவையும், புகாரையும் ரத்து செய்யக்கோரி, அலகாபாத் ஐகோர்ட்டில் ராகுல்காந்தி வழக்கு தொடர்ந்தார். அவர் சார்பில் ஆஜராகி வாதிட்ட வக்கீல் பிரான்சு அகர்வால், ''ராகுல் காந்தி, லக்னோவில் குடியிருப்பவர் அல்ல.

எனவே, அவருக்கு சம்மன் அனுப்புவதற்கு முன்பு, குற்றச்சாட்டுகளை கீழ்க்கோர்ட் தீவிரமாக விசாரித்திருக்க வேண்டும், விசாரணைக்கு உகந்தது என்று தெரிந்தால் மட்டுமே சம்மன் அனுப்பி இருக்க வேண்டும்'' என்று கூறினார்.

ஆனால் அதை ஏற்க மறுத்த அலகாபாத் ஐகோர்ட், ராகுல்காந்தி மனுவை தள்ளுபடி செய்தது. அந்த உத்தரவை எதிர்த்து, சுப்ரீம் கோர்ட்டில் ராகுல்காந்தி மேல்முறையீடு செய்தார். அம்மனு, நீதிபதிகள் திபங்கர் தத்தா, அகஸ்டின் ஜார்ஜ் மசி ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது, ராகுல்காந்திக்கு நீதிபதிகள் கண்டனம் தெரிவித்தனர். நீதிபதிகள் கூறியதாவது:–

2 ஆயிரம் சதுரகி.மீ. இந்தியபகுதியை சீனா ஆக்கிரமித்துக்கொண்டதாக உங்களுக்கு (ராகுல்காந்தி) எப்படி தெரியும்? நீங்கள் அங்கு இருந்தீர்களா? உங்களிடம் நம்பகமான ஆதாரம் இருக்கிறதா?

எந்த ஆதாரமும் இல்லாமல் ஏன் இப்படிப்பட்ட கருத்துகளை பேசுகிறீர்கள்? நீங்கள் உண்மையான இந்தியராக இருந்தால், இதுபோன்று பேச மாட்டீர்கள்.

நீங்கள் எதிர்க்கட்சி தலைவர். இதை ஏன் நீங்கள் நாடாளுமன்றத்தில் சொல்லவில்லை?. சமூக வலைத்தளங்களில் ஏன் சொல்கிறீர்கள்?

இவ்வாறு நீதிபதிகள் கூறினர்.

### வக்கீல் கருத்து

ராகுல்காந்தி சார்பில் ஆஜரான மூத்த வக்கீல் அபிஷேக் சிங்வி கூறியதாவது:

எதிர்க்கட்சி தலைவர் பிரச்சினைகளை எழுப்ப முடியாவிட்டால், அது துரதிருஷ்டவசமான சூழ்நிலையாக இருக்கும். அவர் இதுபோன்ற விஷயங்களை சொல்ல முடியாவிட்டால், அவர் எதிர்க்கட்சி தலைவராகவே இருக்க முடியாது.

ஒரு உண்மையான இந்தியர், நமது 20 இந்திய வீரர்கள் அடித்துக்கொல்லப்பட்டதாக கூறுவது சாத்தியமானதுதான். இது கவலைக்குரிய விஷயம்.

இவ்வாறு அவர் கூறினார்.

அதற்கு நீதிபதிகள், ''எல்லையில் மோதல் நடக்கும்போது, இருதரப்பிலும் இழப்பு ஏற்படுவது வழக்கத்துக்கு மாறானதா?'' என்று கேட்டனர்.

வக்கீல் அபிஷேக் சிங்வி, ''ராகுல்காந்தி முறையாக தகவல் வெளிப்படுத்தினார். தகவல்களை மறைப்பது பற்றி கவலை தெரிவித்தார்'' என்று கூறினார்.

நீதிபதி திபங்கர் தத்தா, ''இந்த கேள்வியை எழுப்ப உரிய அமைப்பு இருக்கிறது. ஒரு பொறுப்பான எதிர்க்கட்சி தலைவராக இருந்து கொண்டு, ராகுல்காந்தி இப்படி செய்திருக்கக்கூடாது'' என்று கூறினார்.

வக்கீல் அபிஷேக் சிங்வி, ''ராகுல்காந்தி சிறப்பான முறையில் கருத்து தெரிவித்து இருக்கலாம் என்பதை ஒப்புக்கொள்கிறேன். அவரை துன்புறுத்துவதற்காகவே புகார் அளிக்கப்பட்டுள்ளது'' எனறு கூறினார்.

பின்னர், ராகுல்காந்தி மனுவுக்கு 3 வாரங்களில் பதில் அளிக்குமாறு உத்தரபிரதேச மாநில அரசுக்கும், புகார்தாரர் உதய் சங்கர் ஸ்ரீவஸ்தவாவுக்கும் நோட்டீஸ் அனுப்ப நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

லக்னோ கோர்ட்டில் ராகுல்காந்திக்கு எதிரான வழக்கு விசாரணைக்கு இடைக்கால தடை விதித்தனர்.

# டெல்லி தெருக்களில் சுற்றித் திரிந்த தலைமறைவான தமிழ் நடிகை மீராமிதுன்

## போலீசார் மீட்டு காப்பகத்தில் தங்க வைத்தனர்

சென்னை, ஆக.5

**குற்ற வழக்கில் பிடிவாரண்டு பிறப்பிக்கப்பட்ட நிலையில் தலைமறைவான தமிழ் நடிகை டெல்லி தெருக்களில் சுற்றித்திரிந்த நிலையில் போலீசார் அவரை மீட்டு காப்பகத்தில் தங்க வைத்தனர்.**

நடிகையும், மாடல் அழகியுமான மீராமிதுன் (34), பட்டியலினத்தவர் குறித்து அவதூறாக பேசி சமூக வலைதளத்தில் வீடியோ வெளியிட்டதாக கடந்த 2021ம் ஆண்டு அவர் மீது பல்வேறு அமைப்புகளை சேர்ந்தவர்கள் போலீசில் புகார் செய்தனர். இந்த புகார் குறித்து விசாரித்த சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீசார் மீரா மிதுன், அவரது நண்பர் சாம் அபிஷேக் ஆகியோர் மீது வழக்குப்பதிவு செய்து அவர்களை கைது செய்தனர்.

பின்னர், அவர்கள் ஜாமீனில் விடுவிக்கப்பட்டனர். இந்த வழக்கு விசாரணை சென்னை மாவட்ட முதன்மை செசன்ஸ் கோர்ட்டில் நடந்து வருகிறது. இந்த வழக்கு விசாரணையின் போது மீரா மிதுன் தொடர்ந்து ஆஜராகாததால் கடந்த 2022ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் அவருக்கு எதிராக பிடிவாரண்டு பிறப்பித்து கோர்ட் உத்தரவிட்டது.

இந்த உத்தரவை தொடர்ந்து, மீரா மிதுனை கைது செய்து கோர்ட்டில் ஆஜர்படுத்த தனிப்படை அமைக்கப்பட்டது. பிடிவாரண்டு உத்தரவு பிறப்பித்து 3 ஆண்டுகள் ஆன நிலையில் தனிப்படை போலீசாரால் அவரை கண்டு பிடிக்கமுடியவில்லை.

'மீராமிதுன் தலைமறைவாகி அடிக்கடி தங்குமிடத்தை மாற்றி வருவதால் அவரை கைது செய்ய முடியவில்லை. அவரது செல்போன் 'சுவிட்ச் ஆப்' செய்யப்பட்டு உள்ளது என போலீசார் தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்த நிலையில் 2022ம் ஆண்டு அக்டோபர் மாதம் மீராமிதுனின் தாயார் சியாமளா போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் புகார் மனு அளித்தார். அதில், 'மீரா மிதுன் வழக்கை சந்தித்து வந்தபோதிலும் எங்களிடம் தொடர்பில் இருந்தார். ஆனால் தற்போது அவர் எங்கள் தொடர்பில் இல்லை. தொலைபேசியில் அவரை தொடர்பு கொள்ள முடியவில்லை. கண்டுபிடித்து கொடுக்க வேண்டும்' என கூறியிருந்தார்.இது தொடர்பாகவும் போலீசார் விசாரணை நடத்தி வந்தனர்.

இந்தநிலையில் மீரா மிதுனின் தாயார் சென்னை முதன்மை செசன்ஸ் கோர்ட்டில் ஒரு மனு தாக்கல் செய்தார். அதில், 'டெல்லி தெருக்களில், தன் மகள் (அதாவது மீரா மிதுன்) சுற்றி வருவதாகவும், அவரை மீட்க வேண்டும்' என்றும் கூறியிருந்தார்.

இந்த மனுவை விசாரித்த கோர்ட், சென்னை மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு மூலம் டெல்லி சட்டப்பணிகள் ஆணைக்குழுவுக்கு தகவல் தெரிவித்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தரவிட்டது. அதன்படி, டெல்லி போலீசார் மூலம் மீரா மிதுனை கண்டுபிடித்து டெல்லியில் உள்ள காப்பகத்தில் தங்க வைத்தனர்.

இந்தநிலையில் அந்த மனு நீதிபதி எஸ்.கார்த்திகேயன் முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது போலீசார் தரப்பில் ஆஜரான சிறப்பு அரசு வக்கீல் எம்.சுதாகர், டெல்லி காப்பகத்தில் மீராமிதுன் தங்க வைக்கப்பட்டு இருக்கும் தகவலை தெரிவித்தார்.

இதை பதிவு செய்து கொண்ட நீதிபதி, மீரா மிதுனை டெல்லியில் இருந்து அழைத்து வந்து வருகிற 11ந் தேதி ஆஜர்படுத்த வேண்டும் என சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு உத்தரவிட்டார்.

# ''ரஷ்யாவில் சிக்கித் தவிக்கும் தமிழக மருத்துவ மாணவர் உட்பட 126 இந்தியர்களை மீட்க வேண்டும்'': பிரதமரிடம் துரை வைகோ நேரில் வலியுறுத்தல்

புதுடெல்லி, ஆக.5–

பிரதமர் மோடியை டெல்லி நாடாளுமன்ற அலுவலகத்தில் ம.தி.மு.க. முதன்மை செயலாளர் துரை வைகோ எம்.பி. நேரில் சந்தித்து, ரஷியாவில் போர் முனையில் சிக்கி தவிக்கும் தமிழ்நாட்டை சேர்ந்த மருத்துவ மாணவர் கிஷோர் சரவணன் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான இந்தியர்களை பத்திரமாக மீட்டு இந்தியாவுக்கு அழைத்து வர 15 அரசியல் கட்சிகளை சேர்ந்த 68 எம்.பி.க்கள் கையெழுத்திட்ட கோரிக்கை மனுவை வழங்கினார்.

அந்த மனுவில், 'கிஷோர் சரவணன் மட்டுமல்ல, 126 இந்தியர்கள் ரஷ்யா–உக்ரைன் போரில் பங்கேற்க செய்வதற்காகவலுக்கட்டாயமாகரஷ்ய ராணுவத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தியர்களை போருக்கு அனுப்புவது, இந்தியா–ரஷ்யா இடையேயான வெளியுறவுத்துறை ஒப்பந்தங்களுக்கு எதிரானது.

இந்தியர்களுக்கு கட்டாய ராணுவ பயிற்சி அளித்து போருக்கு அனுப்புவது முற்றிலும் தவறான செயல்' என கூறியிருந்தார்.



கோரிக்கை மனுவை பெற்றுக்கொண்ட பிரதமர், அனைத்து இந்தியர்களை மீட்கும் பணிகள் ஏற்கனவே தொடங்கப்பட்டு உள்ளதாகவும், அவை மேலும் துரிதப்படுத்தப்படும் என்றும் துரை வைகோவிடம் உறுதி அளித்துள்ளார். இதேபோன்று, இந்த விவகாரம் தொடர்பாக வெளியுறவுத்துறை செயலாளரையும் துரை வைகோ நேரில் சந்தித்து பேசினார்.


**EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்**

ஓபராய் குரூப் உறுப்பினர்

CIN: L92490TN1983PLC009903

பதிவு அலுவலகம்: 1/24, ஜி.எஸ்.டி ரோடு, மீனம்பாக்கம், சென்னை–600027.

Ph:+91-44-2234 4747 Fax: +91-44-2234 6699

Website: www.eihassociatedhotels.in Email: isdho@oberoigroup.com

**30 ஜூன் 2025ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் சுருக்கம்**

(ரூ. லட்சத்தில்)

| | | 30.06.2025 முடிந்த 3 மாதங்கள் தணிக்கை செய்யாதது | 31.03.2025 முடிந்த 12 மாதங்கள் தணிக்கை யானது | 30.06.2024 முடிந்த 3 மாதங்கள் தணிக்கை செய்யாதது |
|---|---|---|---|---|
| 1 | செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் | 7,368.10 | 42,693.56 | 6,897.65 |
| 2 | வரிக்கு முன் நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்) | 959.42 | 12,747.87 | 482.75 |
| 3 | வரிக்கு முன் நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 828.22 | 12,328.54 | 482.75 |
| 4 | வரிக்கு பின் நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 617.60 | 9,184.74 | 357.98 |
| 5 | காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் [காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (வரிக்குப் பின்) மற்றும் இதர விரிவான வருமானத்தை (வரிக்குப் பின்) உள்ளடக்கி உள்ளது] | 620.53 | 9,193.74 | 371.42 |
| 6 | செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (முக மதிப்பு ஒவ்வொன்றும் ரூ.10) | 6,093.63 | 6,093.63 | 3,046.81 |
| 7 | இதர ஈக்விட்டி (மறுமதிப்பீட்டு ரிசர்வுகள் நீங்கலாக) 31 மார்ச் 2025 தணிக்கை செய்யப்பட்ட பேலன்ஷீட்டில் உள்ளபடி | | 47,556.00 | |
| 8 | வரிக்கு பின் நிகர லாபத்தில் ஒரு சம பங்கு வருவாய் (முழுவதும் செலுத்தப்பட்ட சம பங்கு ரூ.10) (அ) அடிப்படை | 1.01 | 15.07 | 0.59 |
| | (பி) பலமிழந்தது | 1.01 | 15.07 | 0.59 |

குறிப்புகள்:

1. செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதிகள், 2015, விதி 33ன் கீழ், காலாண்டு/ஆண்டுக்கான மேற்கண்ட நிதிநிலை முடிவுகள் அறிக்கையின் சுருக்கம் விரிவான முறையில் ஸ்டாக் எக்சேஞ்சில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. காலாண்டு/ஆண்டுக்கான நிதி முடிவுகளின் முழு வடிவம், நிறுவனத்தின் இணையதளத்திலும் (www.eihassociatedhotels.in) மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்சேஞ்ச் ஆப் இந்தியா லிமிடெட் (www.nseindia.com), பிஎஸ்இ லிமிடெட் (www.bseindia.com) இணையதளங்களிலும் கிடைக்கும்.
2. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள் தணிக்கை குழுவால் மறுபரிசீலனை செய்யப்பட்டு, 04 ஆகஸ்ட், 2025 அன்று நடைபெற்ற இயக்குனர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. சட்டப்பூர்வ தணிக்கையாளர்கள் இந்த நிதி முடிவுகளின் வரையறுக்கப்பட்ட மதிப்பாய்வை மேற்கொண்டுள்ளனர்.

விக்ரம்ஜித் சிங் ஓபுராய்
நிர்வாக இயக்குனர்
DIN : 00052014

புதுடெல்லி
04ஆகஸ்ட், 2025



**பெயர் மாற்றம்**

நான், **NAGARAJAN S/o. Govindasamy**, பிறந்த தேதி: **15.03.1962**, எண்.2496, 9வது தெரு, பவானி நகர், வேளச்சேரி, சென்னை 600042 என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி, **NAGARAJAN GOVINDHA SAMY** என்று அழைக்கப் படுகிறேன்.

**NAGARAJAN GOVINDHASAMY**

**பெயர் மாற்றம்**

நான், **C. Perumal**, தந்தை பெயர்: சின்னசாமி, பிறந்த தேதி: 15.07.1959, ஆதார் எண் 4342 8914 2337, எண் 12/78, 5ஆவது தெரு, அண்ணா நகர், வியாசர்பாடி, சென்னை - 600 039 என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **MANIMARAN** என அழைக்கப்படுகிறேன்.

**C. Perumal**


# நடிகை ரம்யாவுக்கு மிரட்டல் விடுத்த 4 பேர் கைது

பெங்களூரு, ஆக.5–

முன்னாள் எம்பியும் நடிகையுமான ரம்யாவுக்கு சமூக வலைதளங்களில் ஆபாச குறுஞ் செய்தியும் பலாத்கார மிரட்டலும் விடுத்த 4 பேரை பெங்களூரு போலீசார் நேற்று கைது செய் தனர். மேலும் 10க்கும் மேற்பட்டோரை தீவிரமாக தேடி வருகின்றனர்.

கன்னட நடிகர் தர்ஷன் தனது காதலி பவித்ரா கவுடாவுக்கு ஆபாச குறுஞ்செய்தி அனுப்பிய ரேணுகா சாமி என்ற ரசிகரை அடித்து கொலை செய்த வழக்கில் கடந்த ஆண்டு கைதானார். அவருக்கு இரு மாதங்களுக்கு முன்பு கர்நாடக உயர்நீதிமன்றம் ஜாமீன் வழங்கியது. இதற்கு உச்ச நீதிமன்றம் கண்டனம் தெரிவித்தது.

இதுகுறித்து கன்னட திரைப்பட நடிகையும் முன்னாள் எம்பியுமான ரம்யா, ''கொல்லப் பட்ட ரேணுகா சாமியின் குடும்பத்துக்கு நீதி கிடைக்க வேண்டும்'' என சமூக வலை தளத்தில் பதி விட்டார். இதனால் ஆத்திரமடைந்த நடிகர் தர்ஷனின் ரசிகர்கள் அவருக்கு சமூக வலை தளங்களில் ஆபாச குறுஞ் செய்தி அனுப்பியும், பலாத்கார மிரட்டலும் விடுத்தனர். இதுகுறித்து பெங்களூரு மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் ரம்யா புகார் அளித்தார். இதையடுத்து பெங்களூரு மாநகர காவல் ஆணையர் சீமந்த்குமார் சிங் தலைமையிலான போலீசார் ரம்யாவுக்கு மிரட்டல் விடுத்த நபர்களை தேடி வந்தனர். அவர்களின் இன்ஸ்டாகிராம் பக்கத்தின் வாயிலாக கண்டறிந்து, பவன் கவுடா, ராஜேஷ், கங்காதரா, ஒப்பன்னா ஆகிய 4 பேரை நேற்று கைது செய் தனர். இதுகுறித்து காவல் ஆணையர் சீமந்த் குமார் சிங் கூறுகையில், ''ரம்யாவுக்கு மிரட்டல் விடுத்த 4 பேரை கைது செய்திருக்கிறோம்.

இன்னும் 11 பேரின் அடையாளம், முகவரி ஆகியவற்றை கண்டறிந் திருக்கிறோம். விரைவில் அவர் களையும் கைது செய்வோம்'' என்றார்.


**NOTICE**

Notice is hereby given that the share certificates no(s) **227877** for **11810** shares bearing distinctive no(s) **192138660 - 192150469** of Face Value **Rs. 2/-** standing in the name(s) of **Jagat Narain Rajey** Jointly with **Prithwi Narain Rajey** under **Folio No. DBL0227877** in the books of **M/s DALMIA BHARAT LTD.**, and share certificates no**(s) 110677 under Folio No. DCB000359 for 5905** shares **bearing distinctive no(s) 16129408 – 16135312,** of Face Value **Rs. 2/- of DALMIA BHARAT SUGAR AND INDUSTRIES LTD** has/have been lost/misplaced/destroyed and the advertiser has/have applied to the company for issue of duplicate share certificate(s) in lieu thereof. Any person(s) who has/have claim(s) on the said shares should lodge such claim(s) with the company's registrars and transfer agents viz Kfin Technologies Limited, Selenium Tower B, Plot No. 31-32 Gachibowli, Financial District, Nanakramguda, Hyderabad - 500 032 within 15 days from the date of this notice failing which the company will proceed to issue duplicate share certificate(s) in respect of the said shares.

Date: 02-08-2025
Place: Faizabad

Name(s) of the Claimant (s)
**Purnima Deva**



**பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்**

BAJAJ FINSERV

கார்ப்பரேட் அலுவலகம்: செரிப்ரம் ஐடி பார்க் B2 பில்டிங், 5வது தளம், கல்யாணி நகர், புனே, மகாராஷ்டிரா 411014

கிளை அலுவலகம்: பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், கீழ் தளம், சேட்டோ டி அம்பா, எண்.37, நெல்சன் மாணிக்கம் சாலை, சென்னை – 600 029. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி விவரங்கள்: பெயர் : ரதீஷ் ராமச்சந்திரன், Email ID: Rathish.ramachandran@bajajhousing.co.in, Mob No. 9940155459 & 8778385461, 8669189048

**அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான விற்பனை அறிவிப்பு [பிற்சேர்க்கை IV - A (விதி 8(6)]**

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) சட்டம் 2002 விதி 8(6)–ன்கீழ் இதன் மூலம் பொதுமக்களுக்கு பொதுவாக, கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாததாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பாக தெரிவிப்பது யாதெனில், பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (ஈடுபெற்ற கடன் வழங்கியவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கையகப்படுத்தப்பட்ட, ஈடுபெற்ற கடன் அளித்தவரிடம் அடமானம் வைக்கப்பட்ட/ஈடாக வைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்து, கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய கடன் பாக்கிகள், பொருந்தக்கூடிய வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவுகள் போன்றவற்றை மீட்டெடுப்பதற்காக "எங்கே இருக்கிறதோ அதுபோல்", "எதுவாக இருந்தாலும்", "எப்படி இருந்தாலும்" மற்றும் "ஆதாரம் இல்லாத" அடிப்படையில்'' அசையா சொத்துக்கள் மின்னணு ஏல விற்பனை மூலம் விற்பனை செய்வதற்கான செய்யப்பட உள்ளது என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

| கடன்தாரர்கள் / உத்தரவாததாரர் பெயர்கள் மற்றும் முகவரி மற்றும் கடன் கணக்கு விவரங்கள் | 1. மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம் 2. EMD சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி, 3. சொத்தை ஆய்வு செய்வதற்கான தேதி மற்றும் நேரம் | 1. ரிசர்வ் விலை 2. சொத்துக்கான EMD 3. ஏல அதிகரிப்பு |
|---|---|---|
| LAN: 403TLH91048967, 403THT91199655 and 403THT91195859 **1.யுவராஜ் ஜி (கடன்தாரர்)** எண்.7 கென்னடி 1வது குறுக்குத் தெரு ஸ்ரீ நகர் காலனி, திருமுல்லைவாயல், சென்னை 600062 30/07/2025 அன்று மொத்த நிலுவைத் தொகை: ரூ.55,69,663/ – (ரூபாய் ஐம்பத்தைந்து லட்சத்து அறுபத்தொன்பதாயிரத்து அறுநூற்று அறுபத்து மூன்று மட்டும்) மற்றும் 30/07/2025 முதல் சேர்ந்துள்ள எதிர்கால வட்டி மற்றும் கட்டணங்கள். | 1. மின்னணு ஏலத் தேதி : 22 ஆகஸ்ட் 2025 காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை, 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்புடன் 2. கேஒய்சி உடன் EMDஐ சமர்ப்பிக்க கடைசித் தேதி 21 ஆகஸ்ட் 2025 அன்று மாலை 5.00 மணி வரை (இந்திய நேரப்படி) 3. சொத்தை பார்வையிடுவதற்கான தேதி 05 ஆகஸ்ட் 2025 முதல் 21 ஆகஸ்ட் 2025 வரை காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை (இந்திய நேரப்படி) | 1. ரிசர்வ் விலை : ரூ.25,84,000/- (ரூபாய் இருபத்தைந்து லட்சத்து எண்பத்து நான்காயிரம் மட்டும்) 2. EMD : ரூ.2,58,400/- (ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து நானூறு மட்டும்) ரிசர்வ் விலையில் 10% 3. ஏல அதிகரிப்பு ரூ.25,000/- (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) மற்றும் அதன் மடங்குகளில் |

**அட்டவணை 1 :** குடியிருப்பு சொத்தின் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். பிளாட் எண்.எப்2, முதல் தளம், பிளாக் 1, பிளாட்டின் விஸ்தீரணம் 680 சதுர அடி பொதுப் பகுதியை உள்ளடக்கி உள்ளது. மொத்தம் நிலம் 4845 சதுர அடியில் பிரிவுபடாத பங்கு நிலம் 317 சதுர அடி. இந்த சொத்தானது மனை எண்கள்.7 (விஸ்தீரணம் 2440 சதுர அடி) மற்றும் 8 (விஸ்தீரணம் 2405 சதுர அடி), கென்னடி தெரு, ஸ்ரீநகர் காலனி, சர்வே எண்.531/4, திருமுல்லைவாயல் கிராமம், அம்பத்தூர் தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ளது மற்றும் அதன் எல்லைகள் : வடக்கு : சாலை, தெற்கு : சர்வே எண்.534ல் உள்ள நிலம், கிழக்கு : மனை எண்.8 மற்றும் மனை எண்.9, மேற்கு : மனை எண்.6 மற்றும் மனை எண்.7.

**பொது ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பின்வருமாறு:**

★ குறைந்தபட்ச விலைக்கு கீழே பாதுகாக்கப்பட்ட சொத்து விற்கப்படாது. ★ ஏல விற்பனை இணைய ஏல போர்ட்டல் மூலம் ஆன்லைனில் இருக்கும். ★ மின்னணு ஏலம் https://bankauctions.inல் 22 **ஆகஸ்ட் 2025 அன்று காலை 11:00 மணி முதல் நண்பகல் 12:00 மணி வரை** ஒவ்வொன்றும் 5 நிமிடங்களுக்கு வரம்பற்ற நீட்டிப்புடன் நடைபெறும். ★ விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு நிறுவனத்தின் இணையதள URL https://www.bajajhousingfinance.in/auction-noticesஐப் பார்க்கவும் அல்லது எந்தவொரு தெளிவுபடுத்தலுக்கும் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியுடன் தொடர்பு கொள்ளவும்.

**தேதி :** 05/08/2025
**இடம் : சென்னை**

**அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ரதீஷ் ராமச்சந்திரன், பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்**



**ராம்கோ இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்**

பதிவு அலுவலகம்: 47, P.S.K. நகர், ராஜபாளையம் 626 108

கார்ப்பரேட் அலுவலகம்: ''ஆவ்ராஸ் கார்ப்பரேட் சென்டர்'', 98–ஏ, டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை, மயிலாப்பூர், சென்னை–4

CIN: L26943TN1965PLC005297; WEBSITE: www.ramcoindltd.com

**30.06.2025ல் முடிந்த காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகளின் சுருக்கம்**

(ரூ. லட்சத்தில்)

| | விவரங்கள் | முடிந்த காலாண்டு | | | முடிந்த ஆண்டு |
|---|---|---|---|---|---|
| | | 30.06.2025 தணிக்கை செய்யாதது | 31.03.2025 தணிக்கை யானது | 30.06.2024 தணிக்கை செய்யாதது | 31.03.2025 தணிக்கை யானது |
| 1 | செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் | 52,683 | 41,866 | 54,316 | 1,65,867 |
| 2 | காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்) | 5,733 | 3,513 | 4,692 | 14,178 |
| 3 | காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரிக்கு முன், விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 5,733 | 3,513 | 4,692 | 14,178 |
| 4 | காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பின், விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 4,582 | 2,859 | 3,629 | 9,365 |
| 5 | சம பங்கு முறையை பயன்படுத்தி கணக்கிடப்பட்ட துணை நிறுவனங்களுக்கு வரிக்கு பின் (PAT) நிகர லாபத்தின் பங்கு | 1,981 | 712 | 312 | 8,726 |
| 6 | காலத்திற்கான விரிவான மொத்த வருமானம் (வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம் மற்றும் வரிக்கு பின், இதர விரிவான வருமானம் உள்ளடக்கியது) | 8,046 | (1,132) | 3,962 | 17,369 |
| 7 | செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் | 866 | 866 | 866 | 866 |
| 8 | இதர ஈக்விடி | | | | 4,22,401 |
| 9 | நிகர மதிப்பு | | | | |
| 10 | பங்கு ஒன்றுக்கான சம்பாத்தியம் ஒன்றின் மதிப்பு ரூ.1/– (ரூ.)(வருடாந்திரமல்ல) அடிப்படை : | 7.58 | 4.12 | 4.72 | 20.89 |
| | பலமிழந்தது: | 7.58 | 4.12 | 4.72 | 20.89 |

குறிப்புகள்:

1. தனியான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் முக்கிய தகவல்

| விவரங்கள் | முடிந்த காலாண்டு | | | முடிந்த ஆண்டு |
|---|---|---|---|---|
| | 30.06.2025 தணிக்கை செய்யாதது | 31.03.2025 தணிக்கை யானது | 30.06.2024 தணிக்கை செய்யாதது | 31.03.2025 தணிக்கை யானது |
| செயல்பாடுகள் மூலம் வருமானம் | 45,888 | 34,132 | 49,259 | 1,38,702 |
| காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 3,258 | 1,342 | 2,757 | 8,836 |
| காலத்திற்கான விரிவான மொத்த வருமானம் (வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம் மற்றும் வரிக்கு பின், இதர விரிவான வருமானம் உள்ளடக்கியது) | 4,672 | (2,746) | 2,779 | 8,398 |

2. தேவையானதாக கருதப்படும் இடங்களில் கடந்த கால கணக்குகள் ரீ குரூப் செய்யப்பட்டு/மறுவகைப்படுத்தப்பட்டுள்ளது.
3. SEBI (பட்டியல் மற்றும் இதர வெளியீட்டு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டு/ஆண்டு நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் பம்பாய் ஸ்டாக் எக்சேஞ் இணையதளம் (URL: www.bseindia.com/corporates), தி நேஷனல் ஸ்டாக் எக்சேஞ் இணையதளம் (URL: www.nseindia.com/corporates) மற்றும் கம்பெனியின் இணையதளம் (URL: www ramcoindltd.com)ல் உள்ளது. கீழே கொடுக்கப்பட்டுள்ள க்யூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் நிதி முடிவுகளின் முழு வடிவத்தையும் அணுகலாம்:

இடம் : சென்னை
தேதி : 04.08.2025

ராம்கோ இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்டுக்காக
P.V. அபினவ் ராமசுப்பிரமணியம் ராஜா
நிர்வாக இயக்குனர்
DIN : 07273249